உ

# வைத்திய போதினி.

சித்திரப்படங்களுடன் கூடிய வைத்திய சம்பந்தமான
ஓர் மாதாந்தத் தமிழ்பத்திரிகை.

புத் 2. | 1911-நவம்பர்மீ | நெ. 11.

## வாழைப் பழத்திலிருந்து சாராயம்.

திராக்ஷைரஸத்திலிருந்து சாராயமெடுப்பது, பின்னும் அநேக விதமான பழங்களிலிருந்து சாராயமெடுத்து மனுஷசமூகம் உபயோகப்படுத்துவது சகலரும் அறிந்ததே. புதிதாய் வாழைப்பழங்களிலிருந்தும் மதுபானம் செய்பவர்களுபயோகப் படுத்துமாறு மதுரஸம் எடுப்பதாக இப்போது அறியக் கிடைக்கின்றது. வாழைமரங்கள் ஏராளமாய்ப் பயிராகிப் பழங்கள் அபரிதமாய் ஏற்றுமதி செய்யப்படுகிற தேசங்களில், ஏற்றுமதிக்கு லாயக்கில்லையென்று எண்ணிறந்த பழங்களின் தொகுதி ஏற்றப்படாமல் தள்ளப்படுகின்றன. இப்பழங்கள் கவனிப்பாரின்றியும் கேட்போரின்றியும் வீணாகக் கிடக்கின்றன இவ்வாழைமரங்கள் ஏராளமாய் நம் நாட்டில் தஞ்சைஜில்லா முதலியவைகளில் ஏராளமாய் பயிரிட்டாலும் ஜமைக்கா. காட்டிமாலா (Jamaica—Gautemala) முதலான விடங்களில் வியாபாரம் செய்வதற்கென்றே இப்பயிர் விசேஷமாகச் செய்யப்படுகின்றது. இப்பயிரிலுண்டாகிய விளைபொருள்களாகிய பழங்களில், ஏற்றுமதிக்கு லாயக்கில்லாமல் 100-க்கு 20 பங்குவீதம் வீணாகப் போகின்றன வெனக்கணக்கெடுக்கப்பட்டிருக்கின்றது. அதாவது வருஷவாரியில் பத்து இலட்சம் தார்கள் (Bunches of Bannanas) வீணாகப்போகின்றனவாம். இப்படி வீணாகப்போவதை என்செய்வது? நம்நாட்டவர் என்றால் வீணாகப்போவதை செலவுக்கணக்கில் வைத்து இளித்தவாய்த்தனமாய் வந்தமட்டும் போதுமென்ற மனத்துடன் இலாப நஷ்டங்களுக்கும் தலையைக் கொடுத்துக்கொண்டு நிற்பார்கள். மேனாட்டினர் நம்மவர்போலல்

லர்து விஷயங்களில் கண்ணாயிருந்து காரியசாதனம் செய்பவர்களாதலின் வீணாய் எறியப்படும் அப்பத்து லட்சம் குலைகள் அல்லது தார்களை செவ்வைசாக உபயோகப் படுத்துவதெவ்வாறு என்று ஆராய்வாராயினார். கீழேவிழ்த்தப்பட்ட மரங்களிலிருந்து பக்குவமாய் நார் எடுத்து வஸ்திரம் நெய்ய சொல்ப சாதனங்களும் அவகாசமும் இலாபமுமிருந்துங்கூடக் கண் விழித்து அதில் தம் கவனம் சிறிதும் செலுத்தாத நம்மிந்திய நாட்டினர் போலில்லாமல் அழுகிப்போகும் அந்தஸ்தில் வேற்று நாட்டிற்கனுப்ப யோக்கியதையில்லாத அப்பத்து லக்ஷத்தார்களை நன்கு பயன்படுத்த நாலாவழிகளையும் ஆராய் வாராயினார். அதனாலும் இலாபம் எடுப்பது எவ்வாறு என்று தக்க நிபுணர்கள் கைத்தொழில் புத்திதெரிந்த யுக்திசாலிகள் இக்காரியத்தில் தம் கவனத்தை அதிகமாகச்செலுத்தினார்கள். இவ்வழிகளில் இவ்வாழைக்காய்களையும், பழங்களையும் பக்குவமாய்க் காயவைத்தாலும், அவை சொற்பநாளைக்கும் குறிப்பிட்ட நெடுநாட்கள் வரையும் பாதுகாக்கும் வழிகள் முதலியவற்றைக்கண்டு பிடித்தார்கள். இவ்வாழைக்காய்களைக் காயவைத்து பில்லை பில்லையாக நறுக்கிக் காய்ந்ததிலிருந்து மாவுஅரைத்தல் முதலான பலகைத்தொழில்களை நன்கு அறிந்து அதன்படியே செய்தார்கள். இப்படிப்பல காரியங்கள் அவர்கள் செய்ததிலிருந்து அவர்கள் தாம் எதிர்பார்த்த இலாபத்தை அடைந்தாரிலராகவே வேறுவகையாக்கிப் பத்து லக்ஷபழங்களை யுபயோகித்துப் பயன்பெற மேலும் மேலும் வழிகள் பல ஆராய்வாராயினார். காடிமாலா ஸென்டரல் அக்ரிகல்ச்சரல் (Gautemala Central Agricultural Association) மூலமாய் பூர்ட்டோ பாரலாஸ் டிஸ்டில் ரிடைரக்டருடன் (Director, Distillery at Puerto Barralos, Gautetmala) ரஸாயன முறையில் அப்பழங்களை உபயோகித்துப் பார்த்ததில் விஸ்கி (Whisky) என்ற சாராயத்திற்கு சற்றேறக்குறைய சமமுள்ளதாயிருக்கும்படியான மதுஸாரம் அகப்படும் படியாயிருந்தது. அம்மாதிரியான வீணாய்ப்போகிற வாழைப்பழத்திலிருந்து எடுக்கப்பட்ட மதுஸாரம், ஸேண்டு லூயி (St. Louis Exhibition) பொருட்காட்சி சாலைக்குப் போயிற்று யுனைடட் ஸ்டேட்ஸ் டிபார்ட்மெண்ட் (United States Department of Agriculture) ஆப் அகரிகல்ச்சர், நன்றாகப் பிரித்துப் பரிசோதித்துப் பார்த்தார்கள். இந்த ரஸம் நிரம்ப யோக்கிய முள்ளதென்று யோக்யதாபத்திரம் கொடுத்ததுடன் நில்லாமல் இவ்விரஸத்திற் கொருதங்கப் பதக்கமும் (Awarded a Gold Medal) பரிசளித்தார்கள். ஒருதார் பழத்திலிருந்து 4½-லிட்டர் (4½-Litres) அல்லது ஒரு காலன் மதுஸாரம் எடுக்கக்கூடுமென்று கணக்கெடுக்கப் பட்டிருக்

கிறது. இதனை யெடுக்கச்செலவாகும் கூலி நிரம்பவும் சொற்பமேயாகுமென்று சொன்னால் யந்திர உதவியினால் இந்தியாவில் எடுக்க இன்னும் சொற்பகூலியே பிடிக்கக்கூடும் என்னும் விஷயம் வற்புறுத்திச் சொல்லவேண்டுவதில்லை. இம்மதுஸாரம் எடுப்பதற்காகவே இரண்டு வருஷகாலம் பரிசோதனார்த்தமாக இவ்வாழையைப் பயிரிட்டுப் பார்த்ததில் அதிக லாபம் வரக்கூடியதாக இருக்கக்கூடுமென்று சொல்லப்படுகிறது. கீழே விழ்த்தப்படுகிற வாழையை நன்றாகப் பயன்படுத்த மனங்கொள்ளாமல் சோம்பேறிகளாயிருக்கிற நமது தென்னிந்திய வாசிகள் போன்றவர்கள், இப்பழங்களிலிருந்து பேனட்டினர்போல் மதுஸாரமா எடுக்கப்போகிறார்கள்? இப்படியெல்லாம் கைதொழிலூக்கம் நம்நாட்டில் பிரபலித்துவிட ஆரம்பமாய்விட்டால் பிறகு நமக்கென்ன குறைச்சல்!

## தேகவலிமை.

என்ன காரணத்தாலோ நாளுக்குநாள் நம்மவர்கள் தேகபலம் குன்றி க்ஷீணித்துக்கொண்டு வருகிறார்கள். ஒருதேசம் எவ்வளவு சம்பத்துள்ள பூமியாயிருந்தபோதிலும் என்ன பிரயோஜனம்? அந்த சம்பத்தை யநுபவிப்பதற்குப் போதுமான தேகபலமும் ஆரோக்கிய வாழ்க்கையும் இல்லாதவிடத்தில் அது என்ன பயனைத் தரப்போகிறது? நமது தேசத்துக்கு இனி நேரவிருக்கும் பெரிய விபத்துகளுள் இதுவுமொன்று. ஒருமுப்பது வருஷங்களைத் தள்ளிப்பார்த்தால் அப்போதிருந்தவர்களின் தேகதிடத்திற்கும் இப்போதுள்ளவர்கள் தேகதிடத்திற்கும் இருக்கும் பேதம் நன்கு விளங்கும்.

முதலாவதாக நம்மவர்கள் தேகப்பயிற்சி செய்வதையே முற்றும் ஒழித்துவிட்டார்கள். நாகரீகம் நாகரீகமென்று ஓயாமற் பேசிக்கொள்ளு மிந்நாட்களில் பந்து விளையாட்டுகள் தேகாப்பியாசமுயற்சிகளிலே ஒன்றாக மதிக்கப்படுகிறது. பிராசீனகாலத்தார் தேகப்பயிற்சிக்கென்று தனியாக ஒரு காலத்தைக் குறிப்பிட்டுவைக்கவில்லை. ஜனசமூக வாழ்க்கைக்கு அவசியகரமாயுள்ளவைகளனைத்தையும் மதசம்பந்தமான முயற்சிகளிலே கலந்துவிட்டிருக்கின்றார்கள். பிராதக்காலத்தில் நான்குமணி நேரத்திற்கு எழுந்து ஆறு குளங்கள் நோக்கி நடந்து துணிகளை நன்றாகத் தோய்த்து ஸ்நானம் செய்து தீர்த்தமெடுத்துக்கொண்டு இல்லம்புகுந்து தேவதா பூஜைமுதலியன முடித்துப் புராண படனம்செய்து, பின்பு வெளிவிஷயங்களைக் கவனிக்கும்படி நியமித்திருக்கிறார்கள். இதனிலும் சிறந்த தேகப்பயிற்சி என்ன விருக்கிறது? மாலைநேரத்திலே சந்தியாவந்தனக் கிரியைகளும், ஆலயதரிசனமும் குறுக்கிடுகின்றன. காலை மாலை இரு

ரோகங்களிலும் தேகப்பயிற்சியை நம்மையறியாமலே நாம்நடத்தி வருகிறோம். இதிலே யாதொரு அட்டகாசமுமில்லை? ஆகவாரமுங்காணோம். முற்காலங்களில் இரண்டரை தக்ஷிணைக்காகப் பத்து மைல்தூரம்கூடப் பிராமணன் நடந்துபோயிருக்கிறான். இப்போது அவனுடைய பேரன் கால்மைல்கூட நடக்கச் சக்தியின்றி டிராம்வண்டிகளின் சகாயத்தை விரும்புகின்றான்.

மேலும் அக்காலத்தவர்கள் வெகுகாலம் சுகஜீவிகளாய் வாழ்ந்து வந்திருக்கின்றார்கள்; சிற்றின்ப விஷயத்தை வெகுகாலம்வரையில் அறியாதவர்களாகவே காலங் கழித்திருக்கிறார்கள். பணத்தின் அருமையையும் அப்போது தெரியாது; இப்போது அழுகிற குழந்தைகள்கூட காசைக் காட்டினால் அழுகையை நிறுத்திவிடுகின்றன. ஒருவாழைக்காய் ஒருவனுக்குப் போதாது, இப்போது அதே காயைப் பத்துப்பேர் தொட்டுத் தொட்டுப் பார்த்துக்கொண்டு சாப்பிடுகிறார்கள். இதற்குக்காரணம் செட்டுத்தனமன்று; நகைப் பைத்தியமும் ஒருகாரணம். ஆடம்பரமான செலவுகள் ஏற்பட்டு அவசியமான செலவுகளைக் குறைத்து விட்டிருக்கின்றன. பால்ய விவாகத்தைப்பற்றி எத்தனையோபேர் தங்கள் வாக் சாதுர்யத்தை எல்லாம் வைத்துப் பேசியிருக்கிறார்கள். மாதர்கள் ருதுமதியானவுடனேயே இல்வாழ்க்கையிற் பிரவேசித்துவிடுவதில் உண்டாகும் கெடுதிகளைப் பற்றியும் எண்ணிக்கையில்லாத வியாசங்கள் பிரசுரமடைந்திருக்கின்றன.

நாட்டில் இப்போது எத்தனையோ விதமான நோய்களெல்லாம் உற்பத்தி பெற்றிருக்கின்றன. தேகத்திலே தக்கவலிமை இருக்குமாயின் இவை நமது சமீபத்தில் அணுகுமா? எப்போது தேகதிடம் குன்றியதோ அப்போது வியாதி தனது உக்கிரத்தைக் காட்டத் தொடங்கிவிடுகிறது.

சென்றுபோன மகாமக உத்ஸவம் எதற்காக ஏற்பட்டதென்று புராணரீதியாகவின்றி வேறுவிதமாகக் கவனிப்போமாயின் அதுவும் தேகப்பயிற்சிக்காகவே ஏற்பட்டதென்று விளங்கும். ரயில் முதலிய உபகரணங்கள் இல்லாத முற்காலங்களிலே மாசிமாதத்திலே மகாமகம் வருகிறதென்று தெரிந்த ஒருவன் கும்பகோணத்துக்குப் புறப்படுவதற்கு எத்தனை தினங்கட்கு முன்னதாகவே பயணத்தைத் தொடங்கி விட்டிருக்கவேண்டும்? இடம் விட்டு இடம் மாறுவதாலும் தேச சஞ்சாரத்தாலும் சரீர ஆரோக்கியத்திற்கும், வர்த்தகாபிவிர்த்திக்கும் எத்தனையோ சாதகங்கள் உண்டாகின்றன. காசி, ராமேச்வர யாத்திரை செய்தவன் மகா புண்ணியவான் என்னில் அவன் தேகமுயிற்சியிலே எத்தனை முதிர்ச்சி பெற்றவனாக இருக்கவேண்டும்? எத்

தனை நாடுகள் சுற்றியிருக்கவேண்டும்? அவனது சரீரம் வஜ்ஜிர காயமல்லவா? க்ஷேத்திரயாத்திரை செய்யும்படி ஏற்பட்ட பல காரணங்களுள் இதுவுமொன்றாக நாம் ஏன் பேசக்கூடாது?

காரணங்கண்டு பிடித்தற்கு முடியாத அநேக காரியங்கள் வழக்கம் என்னும் பைசாசத்திற்கு உட்பட்டுப்போயிருக்கின்றன. யாதுகாரணம்பற்றி நம்மவர்கள் கஞ்சியை வடித்து விடுகிறார்களோ அறியக்கூடவில்லை. அரிசியின் முழுச்சத்தும் கஞ்சியில் பிழியப்பட்டுப்போகின்றது. இது கரும்பிலிருந்து ரசத்தை எடுத்து எறிந்துவிட்டு சக்கையை உபயோகிப்பதை யொத்திருக்கின்றது. தென் தேசத்தானும் வடதேசத்தானும் சண்டைக்கு நிற்பார்களாயின் வடதேயத்தானே வெற்றி பெறுவான். வட தேசங்களிலே கோதுமை சாப்பிடப்படுகிறது. தென் தேசத்திலோ அரிசியேமுக்கிய ஆகாரம்; அதிலும் சாரமாயுள்ள கஞ்சியை நீக்கிவிட்டு சக்கையைப் புசிப்பது வழக்கமாக விட்டிருக்கிறது. ஏன் ஜலத்தைக் குறைத்து புலால் முதலியன சமைப்பதையொத்து அரிசியையும் சமைத்து உண்ணக்கூடாதோ நாம் அறியோம்.

இவை எல்லாவற்றிலும் தேகபலத்திற்குத் தீங்குதருவது மனக்கவலையாகும். எப்பேர்ப்பட்ட திடகாத்திய தேகியாயிருப்பினும் மனக்கவலைமட்டும் உண்டாயின். அவன் வீரங்குன்றி யீனமடைகின்றான். நமது தேசாபிவிருத்திக்கு வாலிபர்களே நல்ல குருத்து. இப்படிப்பட்ட வாலிபவர்கள் பாடசாலைகளிலே நிரம்பவும் கவலைப்பட்டு வருகிறார்கள். முற்காலங்களில் சுலபமான வழிகளிலே வித்தியாப்பியாசம் செய்யப்பட்டு வந்தது. இப்போதோ பரீக்ஷைகளின் கொடுமைகளால் மனக்கவலைக்கு ஆளாகித் தேகதிடங்குன்றி மூக்குக்கண்ணாடி நேசர்களாய் இரண்டுக்கும் உதவாமல் கெட்டுப்போகிறார்கள். அந்த நாட்களிலே கல்வியானது விவேக விருத்திக்கென்று பதிக்கப்பட்டு வந்தது; ஆனால் இப்போதே எ, பி, ஸி, டி, ஆரம்பிக்கும் போதே அந்தப் படிப்பு உத்தியோகத்திற்காகப் படிப்பதென்ற குருட்டுத் தனமான கொள்கையை நம்மவர்கள் சிறுவர்களின் தனதிலேஉற்பத்தி செய்துவிடுகிறார்கள். மேலும் அந்நிய பாஷையிலேயே காலமுழுமையும் போராடவேண்டியிருப்பதில் அதிக கஷ்டத்தையும் மிகுந்த மனக்கவலையையும் ஏற்றுக்கொள்வதில் தேகபலம் க்ஷீணிக்கிறது. படிப்பு முடிவதற்குள் விவாகம் ஆரம்பமாய் விடுவதில் உலக இன்பத்தைச் சுவைபார்க்க முயல்வதிலிருந்தும் பிணியின் வாய்ப்பட்டு பாம்பின் வாய்த்தேரைபோலாகின்றார்கள். இதனிடையில் ஜீவனவிசாரம் சூழ்கின்றது. "என்ன விசாரம்வைத்தாய் இறைவா கச்சியேகம்பனே" என்று கலங்

ருகிறான். முடிவில் முப்பது பிராயத்திற்குள் மூப்புப்பருவம் மூடிக்கொள்ள அவனது காலமும் முடிந்து வருகிறது. இப்படி மனக்கவலையிலேயே வாழ்நாள் முழுதும் மூழ்கியிருக்குமாயின் முன்னேறுவதெங்கே!

ஆபரணப் பைத்தியம் நம்நாட்டிலே அதிகப்பட்டு வருகிறது. அழகுக்கு ஆபரணம் செய்வது ஒருபுறமிருக்க பின்னாட்களில் உதவுமென்றே பெரும்பாலோர் நகைகளிலே முதலிடுகிறார்கள். ஆபரணம் செய்ய ஆரம்பித்த தினமுதற்கொண்டு தட்டானிடம் பொன் கொடுத்து நகையைப் பெறுகிற தினம் வரையில் ஒருவன்படும் அலைச்சலையும் அவஸ்தையையும் நன்றாகக் கவனித்துப் பார்ப்போமானால் ஆபரணத்திலோ முதலிடுவதில் லாபமில்லையென்று ஒரு தீர்மானத்துக்கு வந்துவிடுவோம். 70-ரூபா நகையை 60-ரூபாய்க்கு விற்க முயல்வதும் சில இடங்களில் தட்டார்கள் பொடிவைத்து மோசம்செய்து விடுவதில் ரூபா 40-க்குக் கேட்பதும், சொந்தக்காரன் திகைப்பதும் கண்டிருக்கிறோம். நகைகளில் முதலிடாமல் சேவிங்க்ஸ் பாங்கி (Savings-Bank) முதலியவற்றில் ஏன் சேர்த்து வைக்கக் கூடாது என்று கேட்கப்போனால், அது சிக்கிரம் வாங்கிவிடும்படியாக இருக்குமென்றும், நகையானால் அப்படி வாங்கமுடியாதென்றும் விடை பேசப்படுகிறது. இது எத்தனை மௌட்டிகமான செய்கை என்னலாம்! இதற்குக் காரணம் தேகதிடமில்லாததுதான், எப்போதும் தேகத்திற்கும் மனதிற்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. தேகதிடமற்றுப்போவதிலிருந்து மனோதிடமுமற்றுப்போய் அதன் மூலமாக நம்பிக்கையும் அத்தனை உறுதியில்லாததாகின்றது. அப்படிப் பூர்ணமான நம்பிக்கை வைக்கச் சக்தியில்லாததால் பாங்கிமுதலிய இடங்களில் போட்டுவைக்கப்பின் வாங்கிக்கொண்டு நகைகளில் முதலிடுகிறார்கள். தேகதிடமில்லாத காரணத்தாலேயே நம்மவர்கள் ஒத்துமையற்றவர்களாகவும் பரஸ்பர நம்பிக்கைபாராட்ட இயலாதவர்களாகவும் இருக்கிறார்கள்.

வஞ்சனை, சோம்பல், வறுமை, கோபம், பகல்நித்திரை, மோசஞ்செய்தல், சந்தேகம்—முதலிய பைசாசங்களெல்லாம் தேகதிடனில்லாததினாலேயே நம்மை நாடி வருகின்றன. உழைப்புள்ளவன் பாக்கியவான்; அவனுக்குக் கடன் என்பது இல்லை. பிறரை வஞ்சிக்கவும் மோசம் பண்ணவும் அவன் ஏன் துணியவேண்டும்? தனது உழைப்பினால் எத்தனை அருமையான காரியமாயிருப்பினும் சுலபசாத்தியமாக்கிக்கொள்வான். உழைப்புள்ளவன் பிறர்கையை எதிர்பாராமல் தனது கையையே நம்பியிருப்பான். வறுமை அவனை எட்டியும் பாராது. இதேவித நிலைமை

யிலே அவ்வுழைப்பாளியின் குடும்பம் எவ்வளவு உன்னதத்தைப் பெற்றிருக்குமோ அதேவித ஸ்தானத்தில் நமது பாரதநாடும் இருந்தகாலமும் ஒன்றுண்டல்லவா! அப்படிப்பட்ட தேசம் பாழாய்ப்போனதற்கு உழைப்பின்மையும் ஒருகாரணம். அவ் வுழைப்புக்குத் தேகபலம் ஆவசியகம். இப்படிப் பலவிதத்தும் அத்தியாவசியகப்படுகின்ற தேக வலிமையை அபிவிர்த்திப்பதி அஸ்திவாரமில்லாமல் வீடுகட்ட எண்ணுவதுபோலாகும். எஞ் ஞான்றும் ஆரோக்கிய பாக்கியமே சர்வசிலாக்கிய மென்ப.

இராமாநுஜம்.

## கடவுளின் கருணையைக் கனவிலும் மறவாதே.

ஓ! மனமே! உனக்கேன் இச்சோர்வு! இவ்வச்சமும் கவலை யும் உனக்கேன்! காரணம் என்னவென்று எண்ணிப் பார்த் தனையோ! ஈசனது அனுக்ரகம் அல்லவா? அது அவ்வாறாக: நீ துன்புற்று அல்லற் படுங்கால், "கருப்பைக்குள் முட்டைக்கும் கல்லினுள்தேரைக்கும் விருப்புற்று அமுது அளிக்கும் மெய் யனு"ம் வாரானோ? "அத்திமுதல் எறும்பு ஈறான உயிர் அத் தனைக்கும் சித்தம் மகிழ்ந்து அளிக்கும் தேசிகனு"க்கு நின்னைக் காத்தலும் கடன் இலையோ? உன்னிப்பார்த்துச் சஞ்சலத்தை விடுத்து, ஓ நெஞ்சமே! நாதனிடத்து நின் சலியா நன்னம்பிக் கையைச் செலுத்து!

"பட்டகாலிலே படும் கெட்டகுடியே கெடும் என்னுமாறு, இடுக்கண் உற்றுழி அல்லல் பல அடுக்கி வந்துநின்னைச் சூழ்ந்து எழுந்து நெருக்கிய காலத்து, தளர்ந்து நீ வீழாது நின்னை ஏந்தித்தாங்கி கைகொடுத்து நின்றது கடவுளின் கருணை அல்ல வா? சிக்குச்சுழல்கள் உள்ள இம்மண்ணுலகில் திக்குத் திசை தெரியாது தவித்த காலத்து நின்னைச் செந்நெறிசெலுத்தி நடாத்தியது ஆதிபகவன் அருள் அல்லவா? இன்னணம் மூல முதல்வனது முறைஅறிந்தும் ஓ! மனமே! வாட்டம்உனக்கேன்?

சம்ஸாரம் என்பது துக்க ஸாகரம் அன்றோ? மலைபோல் அலைகள் அடுத்து அடுத்துப் புரண்டு எழுந்து கோஷித்துவரும் புயல் மோதப்பட்ட ஆழ்கடல் அதுவென நீ அறியாயோ? துய ராழியின் ஒய்விலா உயரலைகள் பொங்கி எழுந்து கரைபுரண்டு நின் மீது உருண்டு ஓடிவந்தாலுமென்? ஊக்கமொடு காக்க ஒரு நாதன் நின்னுள் நிற்பதை நினக்கு நினைப்பூட்டவும் வேண்டுமோ?

அண்டம் புரளும்படி சண்ட மாருதத்தை வீசி மோதி அடிக்கச்செய்த எல்லாம் வல்ல ஈசனுக்கு அதை அடக்கி அமைதியாக்குவதும் அரிதாமோ? சர்வசக்தனும் இமைப்பொழு தில் நின் இடும்பைக்கு இடும்பை புரிந்து உனக்கு அமைதி எய்துவிக்கத் திருவுளம் பற்றினும் பற்றலாமன்றோ?

∴ ஆனதுபற்றி, ஓமனமே! அந்தகாரம் நிறைந்த நள்ளிரவி லும் அப்பனது அநுக்ரகங்களை எண்ணி எண்ணி, நினைந்து நினைந்து, நெக்குவிட்டு நெகிழ்ந்து உருகி, நின்னிடத்தே அன்பு வெள்ளம்தேக்குவாயாக! கடவுளின் திருவடிகளைக் கடைப்பிடி யாய்ப் பற்றிப்பிடித்து நின்னிடத்தே நாட்டிக்கொள்வாயாக! அவ்வாறு செய்யின் அல்லல் அற்று, அருள்பெற்று, பொய்யாப் புலமைத் திருவள்ளுவர்

"மலர்மிசை எகினான் மாணடிசேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்." (குறள்.)

என அருளியவண்ணம் நீ உவப்பிலா ஆனந்தம்பெறுவாய்! ஐயம் சற்றுமின்று! சத்தியம் என்று எண்ணித் திண்ணமாய்க்கொள்.

விவேக போதினி.

## செவ்வாய்.

இது நவக்கிரகங்களிலொன்று, இக்கிரக நிலையையுடைய வனுக்கும் செவ்வாயென்றுபேர். அவன் சிவந்த மேனியன் அந் நிறம் வேறுபடின் பூமியிற் கலகம் நோய் முதலிய உற்பாதங்கள் உண்டாகுமென்பர்.

செவ்வாய் என்னும் கிரகத்தில் நாம் வசிக்கும் பூமண்டலத் திற்போலச் சீவபேதங்கள் சஞ்சரிக்கின்றனவென்பது அமெ ரிக்கா வானசாஸ்திரிகளால் நிச்சயம் செய்யப்பட்ட உண்மை. அங்கே பலவெட்டு வாய்க்கால்களுமுளவாம். அவைகளொவ் வொன்றும் ஆயிரம் மைலுக்குக்குறையாத நீளமுடையனவென் றும், அவைமிக்க திறமையுடைய இஞ்சினீர்மார்களாலும் தொழிலாளிகளாலும் இயற்றப்பட்டனவென்றும் அச்சாஸ்திரி கள் நிச்சயப்படுத்தியிருக்கிறார்கள். இக்கிரகத்துக்குப் பூமியிலி ருந்து ரூபங்களனுப்பவும் அந்ரூபங்களுக்கு மறுமொழி பெறுதற்குமான நூதன இயந்திரமொன்றை "மிக்கறிஸ்" என் னும் வானசாஸ்திரி செய்ய எத்தனப்படுவதாகச் சிலகாலத்துக்கு முன் பத்திரிகைகள் கூறின. அவ்வியந்திரம் 20-இலட்சம் பவு ணுக்குமேல் செலவிடப்பட்டு அரசினர் உதவியால் இப்பொழுது பூர்த்தியடைந்து வருவதாக அமெரிக்கா பத்திரிகைகளாலறிந் தோம். இவ்வியந்திரம் முற்றுப்பெற்று சாஸ்திரியாரின் எண் ணம் கைகூடுமானால் எத்தனையோ நூற்றாண்டுகளுக்குமுன்ன தாகவுள்ள நமது புராணங்கள் கூறிய உண்மைகளுக்கு இதுவு மோர் இக்காலச் சான்றாகுமென்பதிற் சந்தேகமில்லை.

## புத்தகவரவு.

இராஜாம்பாள் என்னும் துப்பறியும் செந்தமிழ் நவீன நாவ லொன்று வரப்பெற்றோம். சந்திரகாந்தா, மோகனசுந்திரம் என் னும் அற்புத நாவல்களை இயற்றிய ஸ்ரீமான் J. R. ரங்கராஜு

அவர்களே இதனாசிரியராவர். இதன் நடைப்போக்கும் நடையழகும் கதையின் அமைப்பும் நிரம்பவும் அழகாய் அமைந்திருப்பதானது ஆசிரியரவர்களின் கதையெழுதும் வன்மையை விளக்கிக்காட்டுகிறது. ஸ்ரீமான் ராஜு அவர்களால் இயற்றப்பட்டிருக்கும் ஒவ்வொரு நாவல்களும் ஒவ்வொரு இரத்தினங்களாகவே தமிழ் மக்களால் மதிக்கப்படுமென்பதிலையமில்லை. இரத்தினங்களோ வெனில், கோமேதகம், நீலம், பவளம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைரம், வைடூரியமென நவரத்தினங்களாம். ஆனால் ஸ்ரீராஜு அவர்களால் இயற்றப்பட்டுள்ள நாவல்களாகிய மூன்று ரத்தினங்களன்றி பாக்கியாயுள்ள ஆறுரத்தினங்களையும நாவல் ரூபங்களாகவே விரைவில் வெளியிட்டு தமிழுலகை மகிழச்செய்யப்பின்னடையார்களென்பது எமது துணிபு. இதனை நமது பார்வைக்கு அனுப்பிவைத்ததற்காக நமது நன்றியறிதலைச்செலுத்துகிறோம். மேற்கண்ட நாவலின் விலை அணா 12தான். வேண்டியவர்கள் மௌண்ட்ரோட் ரங்கராஜு பிரதர்ஸ் அவர்களுக்கெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

அலெக்ஸாண்டராஸ் பாக்கேட் டைரி:—இதில் பஞ்சாங்கம், பண்டிகைக் குறிப்புகள், தபால் தந்திக் குறிப்புகள், இன்ஷோர், இன்கம் டாக்ஸ், கவர்ன்மெண்டு விடுமுறை தினங்கள், வட்டி விபரங்கள், குடும்ப ரிஜிஸ்தர், ஞாபகக் குறிப்பு, வண்ணான் கணக்கு, தினசரி டைரி முதலியவைகளும், சுருங்கச் சொல்லிற் பிரதி மனிதர்களுக்கும் இன்றியமையாத ஒவ்வொரு விஷயங்களும் இதில் அடங்கியிருக்கிறது. இந்த டைரியானது நாணயமான காகிதத்தில் நாகரீகமாகப் பதிப்பிக்கப் பெற்றிருப்பதுடன், அதன் வெளியழகும் வேலைப்பாடும் நிரம்ப அழகாய் அமைந்திருக்கிறது. இதன் விலை கவர் வைத்தது அணா 6-ம், சாதாரணமானது அணா 4-தான். அலெக்ஸாண்டராஸ் ஜெம் டைரி இதன் விலை அணா 6. இது ஒவ்வொரு வக்கீல்களிடத்திலும், வியாபாரிகளிடத்திலும், இருக்கவேண்டியது அவசியமாகும். வேண்டுபவர்கள் அலெக்ஸாண்டரா பிரஸ், கும்பகோணம், என்றெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

## நமது புதிய கவர்னர்.

நமது புது கவர்னர் "ஸர் தாமஸ் கிப்ஸன் டேவிட் கார்மிகேல்" நவம்பர்மீ 1உ சென்னைக்கு வந்துசேர்ந்தார். 3-ம் தேதி மாலை 4–30 மணிக்கு போர்டு ஸெயிண்டு ஜார்ஜு கௌன்ஸில் சேம்பருக்குச் சென்றார். அங்கு ஆக்டிங்கு சீப் ஸெக்ரிடரி H. A. ஸ்டுவார்டு இவருக்கு மகாராஜா சக்கரவர்த்தி அவர்கள் சென்னைக் கவர்னர் வேலையைக் கொடுத்த ராயல் ஸயன் மானியுவலைப் படித்தார். உடனே 17-மரியாதைக் குண்டுகள் போடப்பட்டது. மிஸ்டர் ஸர் T. கிப்ஸன் கார்மிகேல் கவர்னர் ஸ்தானத்தை வகித்தார். இவர் 1859-ம் வருஷம் பிறந்து கேம்ப்ரிட்ஜிலுள்ள ஸெயிண்டு ஜான் காலேஜில் படிப்பிக்கப்பட்டார் 1881-ல் B. A. பரீக்ஷையிலும், 1884-ல் M. A. பரீக்ஷையிலும் தேறினார். 1895-ம் வருஷம் மிட்லோதியன் கவுண்டிக்கு காலஞ்சென்ற W. E. கிளாட்ஸ்டனுக்குப் பிறகு பிரதிநிதியாய்ப் பார்லிமெண்டில் மெம்பர் ஸ்தானம் வகித்தார். 1908-ல் விக்டோரியாவுக்குக் கவர்னராய் நியமனம் பெற்றார். இவர்

விட்டால் கூடியினர். விக்டோரியா கவர்னராய் இவர் 3-வருஷ காலம் வேலைபார்த்ததில் மிகவும் சாமர்த்தியமாகவும் பிரஜைகளிடத்து இரக்கத்துடனும் ஆண்டுவந்ததால் இவரது சென்னைக் கவர்னாட்சி பெரிதும் குணமாக இருக்குமென்று நம்ப இடமுண்டு.

4வ சனிக்கிழமை 12-மணிக்கு நமது புதுக் கவர்னருக்குப் பல உபசாரப் பத்திரிகைகள் படிக்கப்பட்டன. சென்னைக் கார்பொரேஷனும், சென்னை ஜமீன்தார் சங்கமும், ஆங்கிலோ இந்தியன் அஸோஸியேஷனும், கஞ்சம் ஜமீன்தார் சபையும் உபசாரவரவு பத்திரிகை படிக்க எல்லாவற்றிற்கும் ஒருமிக்க கவர்னர் பதில் சொன்னார். இந்தப்பத்திரிகைகளில் முக்கியமாய் உபசார வார்த்தைகள் சொல்லப்பட்டு இரண்டொரு முக்கியமான விஷயங்கள் மட்டும் குறிப்பிடப்பட்டிருந்தன. கவர்னர் பதில் சொன்னதில், சென்னைக் கார்பொரேஷனுக்கு வடிகால் செப்பனிடும் விஷயமாயும், குழாய்த் தண்ணீர் சுத்தப்படுத்தும் விஷயமாயும், தம்மால் கூடிய உதவி செய்வதாயும், ஸ்தல சுய ஆக்ஷியைப்பற்றி தமக்குச் சிறிது அனுபோகமிருப்பதால் இந்தியாவில் அதை முற்படுத்துவது தமது கடமையாகுமென்றும், கஞ்சம் ஜில்லா சங்கமானது வில்லேஜ் சர்விஸ் செஸ்ஸை எடுத்துவிட இந்தியா கவர்மெண்ட் வாக்குறுதி கொடுத்திருப்பதால் அதை நிறைவேற்ற கவர்னர் ஒத்தாசை செய்ய வேண்டுமென்று கேட்டதற்கு, அதைப்பற்றித் தனக்குத் தெரியாதென்றும் பதில் சொன்னார். மொத்தத்தில், கெவர்ன்மெண்டை வகிப்பவர் நெறி தவறாது நியாயம் செலுத்தவேண்டுமென்றும், ஏகாதிபத்தியத்தில் எந்தப் பாகத்தில் வசிப்பவர்களானாலும் அங்குள்ளவர்கள் பொருளாதாரங்கள் விரியும்படி செய்யவேண்டுமென்றும், அவர்கள் நன்மையை உத்தேசித்து அவர்களுடைய சக்தியையும் திறமையையும் முற்றிலும் உபயோகிக்கும்படி செய்யவேண்டுமென்றும் சொன்னார்—விவேகபோதினி.

## வர்த்தமானங்கள்.

வாழைக்காய்:—முற்றிய காயின் தோலினை நீக்கி மூன்று நாள் வெயிலில்விட்டு உலர்த்தி வற்றலாக்கி உரலிலிடித்து மாவாக்கிப் பலகாரங்கள் செய்து விற்கப்படுகின்றனவாம். பத்துக்காயில் ஒரு இராத்தல் மா உண்டாம்.

நெருப்புக்குச்சி:—க்ளோரேட் ஆப் போடாஷ் ஆறு பங்கும், சல்பைட் ஆப் ஆன்டிமனி இரண்டிலெட்டுபங்கும், காய்ந்த வச்சிரம் ஒரு பங்கும் சேர்த்துக் குச்சியின் நுனியில் தோய்த்து உலர்த்தலே குச்சியில் மருந்து பூசும் முறையாம்.

நூறு ஆகாய விமானி இறந்தது:—ஸம்னீவர் டிங்கென் என்றவிடத்தில் டாக்ஸ் என்ற ஒரு ஆகாய விமானி ஆகாயத்தினின்றும் விழுந்து இறந்துபோனார். இவர் மரணத்தோடு 1908-வருஷம் முதல் இது வரையில் சம்பவித்த ஆகாய விமானிகளின் மரணம் 100-ஆகிறது.

தேள் கொட்டுக்கு மருந்து:—தேள் கொட்டினவிடத்தில், படிக்காரத்தை எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்துப் பற்றுப்போட்டு அதற்குச் சமீபத்தில் நெருப்புத் தழலைப் பிடித்தால் வலி நின்றுவிடுமென்று ஒருவர் எழுதுகிறார். சென்னை மெயில் பத்திரிகை கூறுவது என்னவென்

ரூல், உள்ளிப்பூண்டின் தோலை யெடுத்துவிட்டுப் பருப்பை அரைத்துக் கொட்டினவிடத்தில் பற்றுப்போட்டால் 20-நிமிஷத்தில்வலி நின்று போய்விடுமாம். இரண்டாந்தரம் போட்டால் அங்கு புண்ணாய்விடுமாம். நட்டுவக்காலி கொட்டினாலும் இந்தப்பற்றினால் குணப்படுமாம்.

சீனாவிற் கலகம்:—ஊச்சாங் என்னுமிடத்திலுள்ள கலகக்காரருக்கும், அரசாங்க சேனைக்கும் போர்விளைந்தது. கலகக்காரர்கள் அநேகபட்டினங்களைக்கைப்பற்றிக்கொண்டார்கள். ராஜப் பிரதிநிதி தப்பிஓடிவிட்டார். கலகக்காரருக்கு இப்போதைய அரசரை நீக்கிவிட்டுக் குடியரசு ஏற்படுத்தவேண்டுமென்பதுதான் நோக்கம். நாளுக்குநாள், நிலைபயங்கரமாயிருக்கிறது. அந்நியநாட்டினர் தங்கள் பாதுகாப்புக்காகச், சண்டைக்கப்பல்களைத் தருவிக்கின்றனர். அரசாங்கச் சேனையில் சேதம் அதிகமாம். இக்கலகம் இலகுவில் முடியுமென்று எண்ணுவதற்கிடமில்லை.

டெல்லி முடிசூட்டில் சக்கரவர்த்தியின் கிரீடம்:—நமது மஹாராஜா சக்கிரவர்த்தியவர்கள் டெல்லி தர்பாரின்போது இதற்காக வென்றே பிரத்தியேகமாக் செய்யப்பட்ட ஒருபுதுகிரீடத்தை அணிவார் சக்கரவர்த்தினி, அவர் லண்டன் முடிசூட்டின்போது அணிந்த கிரீடத்தை அணிவதோடு கோஹினோர் என்ற நமது நாட்டில் அகப்பட்ட விலையுயர்ந்த கல்லையும் அணிவார். சக்கிரவர்த்தி நமது இந்தியப் பிரஜைகளுக்கு ஒரு பிரசங்கம் செய்வார். அப்பிரசங்கம் இந்தியாவிலுள்ள சகல பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு துண்டுக் கடிதங்களாக இந்தியாவில் எல்லாவிடங்களிலும் கொடுக்கப்படும். சக்கிரவர்த்தி கப்பலில் வரும்பொழுது போர்டு ஸெயிட்டில் இறங்கமாட்டார். ஈஜிப்டு அரசனை கேடிவை, மெடினாக் கப்பலில் வருவித்துப் பேட்டி தருவார்.

உலகத்தில் பெரிய ரயில்:—இங்கிலீஷ்காரருக்கும் ருஷியருக்கும் இப்போது உண்டாயிருக்கும் நேச உறவினால் இரு தேசங்களுக்கும் பல நன்மைகள் உண்டாயிருக்கின்றனவென்று பல முறைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த உறவின் பயனாக இப்போது புதிதாய்ப் போடவிருக்கும் இருப்புப்பாதையை முதல் வரிசையில் வைக்கவேண்டும். இந்தப் பாதையானது லண்டனிலிருந்து இந்தியாவுக்கு ருஷியாவின் மேல் நேராய் வெகு ஜல்தியில் வரக்கூடியதாயிருக்கும். இந்த ரெயில் பாதை காஸ்பியன் கடற்கரையிலுள்ள பேக்கனிலிருந்து புதிதாய் ஆரம்பித்து பலுச்சிஸ்தானத்திலுள்ள துஸ்கி பட்டணத்தில் வந்து முடியும். அங்கிருந்து இந்திய இருப்புப்பாதை இணைக்கப்பட்டு இந்தியாவுக்கு வரும் பேக்கனிலிருந்து துஸ்கிக்குள்ள தூரம் 1600-மைல். இதற்கு ரயில்பாந்த போட செலவு இரண்டுகோடியே பத்து லக்ஷம் பவுன். இது போட்டு முடிந்த பிறகு லண்டனிலிருந்து இந்தியாவுக்கு 8-நாள் 6-மணி நேரத்தில் பிரயாணஞ் செய்யலாம். ரெயில் செலவு கப்பற் செலவு இரண்டும் தலைக்கு 40-பவுனாகும். 20 தினத்திற்குள் இங்கிலாண்டுக்குப் போய்த் திரும்பலாம்.

பிரான்ஸூம் ஜெர்மனியும்:—மொராக்கோ விஷயமாய்ப் பிரான்ஸுக்கும் ஜெர்மெனிக்கும் நடக்கும் பேச்சுகளில் ஒரு பெரிய தடை நேரிட்டிருக்கிறதென்று பிரெஞ்சு பத்திரிகைகள் சொல்லுகின்றன. பிரெஞ்சுக்காரர்கள் கொடுப்பதாகச் சொல்லும் ஸ்தல ஈட்டை ஜெர்மனி ஒப்புக்கொள்ள மறுக்கின்றது. ஆதியில் கொடுப்பதாகச் சொன்னபடி

ஈடு கொடுப்பதற்கு பிரான்ஸ் இஷ்டப்படவில்லையென்றும், அப்படி இஷ்டப்படாதபடியால் பேச்சுகள் நின்றுபோய் புதிதான ராஜீய நிலைமையுண்டாகுமென்றும் 'பிரான்க்பரிடர் ஸீடங்' என்ற பத்திரிகை சொல்லுகின்றது. அப்படிக்கின்றி இவ்விருவல்லரசுகளுக்கும் யுத்த நேரிடும் பக்ஷத்தில் யுத்தகளத்தில் பிரான்சிய அரசாங்கம் தனது 40,87000 போர்வீரர்களையும் நிறுத்துமானால், அவர்களுக்கு நாளொன்றுக்கு 12,20,000 பவுன் செலவாகுமென்றும்; ஜர்மனி அரசாங்கம் தனது 43,84,000 வீரர்களை நிறுத்தினால் அவர் பொருட்டு நாளொன்றுக்கு 14,40,000 பவுன் செலவாகுமென்றும், இதுதரையில் நடக்கும் யுத்தச்செலவென்றும் ஒருவாறு கணக்கிடப்பட்டிருக்கின்றது. கடற் சண்டையிலாயின் இத்தொகையிலும் பார்க்கப் பெருந்தொகையும் பல படைக்கப்பல்களும் சிறு வள்ளங்களின் தேசமும் உண்டாகுமென்பது இராச்சிய பரிபாலன தாந்திரிகர் கூற்றும்.

## விசித்திர விஷயங்கள்.

ஓர் அதிசய இயந்திரம்:—ஆஸ்திரியா அரசாங்கத்தார் தபால் ஆபீஸுக்கு ஒருநூதன இயந்திரம் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அதற்குள் பணம் போட விரும்புபவர்கள், பணத்தைப் போட்டபின்பு உள்ளிருந்தே ஒரு ரசீது கிடைக்கிறதாம். அதை யெங்கும் மாற்றிக்கொள்ளலாம்.

இங்கிலாந்தும் பொய்ப்பல்லும்:—பிரதிவருஷமும் அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்கு 2-கோடி பொய்ப்பற்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதனால் இங்கிலாந்தில் சுயபற்களையுடையோர் ஒருவராவதிருக்கமாட்டார்களென்றும், க்ரேட் ப்ரிட்டனில் அரைவாசிப் பேர் பொய்ப்பல்லுடையவர்களென்றும் காணப்படுகிறது. அமெரிக்கா ஐக்ய நாடுகளின் ஸ்திதி இதற்குக் குறைந்ததல்லவாம்.

கடலைக் கடந்தான்:—1875-ஷு காட்டன் ஒப் என்பவன், இங்கிலாந்தினின்று, பிரான்சுக்கு கடலில் நீந்தி 21-மணி 49-நிமிஷத்தில் சென்றனராம். சென்ற மாதக் கடைசியில் தாமஸ்-உல்லியம்-பர்ஜஸ் என்பவர் முந்திய தூரத்திலும் அதிகமான தூரத்தை 22-மணி 35-நிமிஷத்தில் நீந்தினராம். அவருக்கு இப்போதைய வயது 40-க்கு மேலாகிறது. இந்தத்தீரச் செயலுக்காக நமது சக்கரவர்த்தியார், புகழ்ந்து ஒரு தந்திகொடுத்தார். அவரும் வணக்கமாக கொண்டாடி ஒரு பதில் தந்தி கொடுத்தனராம்.

டையோனே:—இது ஓர் வகைச்செடி. இதனிலையின் ஓரங்களில் ஓர்வகை உரோமங்கள் தேங்காய்திருகும் கருவிபோல அமைந்திருக்கும். ஈ முதலியன இவ்விலையில் வந்திருப்பின், அவ்விலைகள் மூடிவிடும். மூடவே அவைகள் அவ்விலையிலுள்ள வழுவழுத்த ஒருவகை நீரினால் அமிழ்த்தப்பட்டு, இலையின் மத்திய பாகத்துக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கே ஜீரணமாக்கப்படும். இன்னுமிவ்விலையில் சிறு மாமிசத் துண்டைப்போட்டால், அவ்விலை மூடப்பட்டு முன்போல் மூடியும். ஒரு காகிதத்துண்டைப் போட்டால் அவ்விலை மூடுவதில்லை. ஆதலாவிச் செடி மாமிச உணவினையடைய தென்பதும் மாமிசத்திற்கும் மற்றைய பொருள்களுக்கும் உள்ள பேதமறியும் பரிச உணர்வுடையதென்பதும் நன்கறியத்தக்கது.

**ராட்சஸப் பிறப்பு:**—சௌகாட்டில் 4-வயதுள்ள ஒரு ராக்ஷஸப் பையனிருக்கின்றான். அவன் பிறக்கும்போது பல்லுகளுடனே பிறந்தான். 30-40, வயதுடைய மனிதனைப்போலிருக்கின்றான். அவனுக்கு ஒரு கூடைச்சாதமும் ஒரு கூடை மீனும் குறைந்த ஆகாரமாகவிருக்கின்றன. அவனைக்காண யாவரும் அஞ்சுகின்றனர். மனிதர் சமூகத்தை அருவருப்பாகப் பார்க்கின்றான். பசி வருங்கால் சட்டிப் பானைகளை உடைத்துவிடுகின்றான். அவன் குரல் மிருகங்களின் தொனிபோன்றிருக்கின்றது.

**புறத்தோலினல் கூடாரம்:**—புருவோ ஒரு சிறிய பட்சி. அந்தப் பட்சியின் தோலினல் கூடாரமென்றால் அதை ஒரு புதுமை என்று சொல்லாமல் மற்றென்ன சொல்வது? வட இந்திமாவில் ஒரு நூதனமான கூடாரம் செய்யப்படுகிறதாம். அது முழுவதுவும் புருத்தோலினலேயே செய்யப்பட்டு வருகிறதாம். அது நீளத்தில் 60-அடியும் அகலத்தில் 40-அடியும் இருக்குமென்றும், அதற்காக மொத்தச் செலவு நாற்பதினாயிரம் ருபாய்க்குக் குறையாதென்றும் கூறப்படுகிறது. புருத்தோலினல் கூடாரம் அமைப்பதை இதுவரையில் கேட்டதேயில்லை.

**பிரான்சு தேசத்தில் கொலைக்குற்றம்:**—பிரான்சு தேசத்தில் கொலைக்குற்றத்திற் காளாகிறவர்களை ஆயுள் பரியந்தம் சிறைச்சாலையிலடைப்பதேயன்றித் தூக்கிட்டுக் கொல்வதில்லை. பொதுவாகக் கைதிகள் யோக்கியமாக நடந்துக்கொண்டால் அவர்கள் ஜெயிலிலேயே விவாகஞ் செய்துக்கொண்டு வாழலாமென்னும் வழக்கமுண்டாம். அத்தேசத்திலுள்ள ஒரு ஜெயிலில் சிலகாலத்திற்குமுன் ஒரு விவாகம் நடந்ததாம் அவ்விவாகத்தில் மணமகன் தன் மனைவியைக் கொன்று குற்றவாளியானவனும். மணமகள் தன்மாமியாளைக் கொன்று தெண்டனையடைந்தவளாம்.

**கல்லாய்ச் சமைந்த் கடலாமை:**—வட அமெரிக்கா காலிபோர்னியா தேசத்தின் "லாஸ் ஆஞ்சிலிஸ்" நகரத்திற்கருகேயுள்ள மலைச்சாரலில் கல்லாகவமைந்துள்ள கடலாமை சில காலத்திற்கு முன்னர் வெட்டியெடுக்கப்பட்டது. இதன் குறுக்களவு 30-அங்குலமாம். இது 100168-பவுண்டு நிறையுள்ளதாம். இதை வெட்டியெடுத்தவிடத்தில் கடல் சம்பந்தமான கிளிஞ்சல்களிருந்தன. இதை வெட்டி யெடுத்த மலைச்சாரல் கடல் பரப்பிற்கு 3000-அடியுயரமுடையதாம். இது கடலுக்கு 50-மைல் தூரத்திருப்பதாம். இதுகாறுமாங்கு வெட்டியெடுத்த பொருள்களுள் இது மிகப் பழமையானதாம். இதைக் கண்டுபிடித்த விடம் நான்கிலட்சம் வருடங்கட்குமுன்னர் ஒரு மயிலாழமுள்ள கடலாகவிருக்க்வேண்டுமென்றாகித்துச் சில சாஸ்திர விற்பன்னர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். இதைக் கண்டுபிடித்தவர் டாக்டர் ஹெக்டர்-அலியாட் என்பவராம். உலக சிருஷ்டி 6000-வருஷத்திற்கு முற்படாதென்று கூறுபவரது சித்தாந்த மிதனல் மறுக்கப்படுவதாம்?

## பிழை திருத்தம்.

ஆகஸ்டு மாதத்திய பத்திரிகையின் 154-வதுபக்கத்தில் K. முத்துவையர் குட்டுலொட்டி பாலவனத்தம் என்றிருப்பதை முத்துதேவர் என்று திருத்திக்கொள்ளவும்.

## ஹாஸ்யத் துணுக்குகள்.

இஞ்சியென்பது எலிமிச்சம்பழத்தைப் போல் எட்டுச்சாணிகளம் இருக்குமானல், சர்க்கரை என்பது இஞ்சியைப்போல் புளிப்பாகவே இருக்குமல்லவா!

சந்தியாவந்தனம் பண்ணினையா? என்று தகப்பன் பிள்ளையைக் கேட்க "பெருமாள் கோவில் குளத்தில் பண்ணினேன்" என்றான், "அதில் தண்ணீரில்லையே" என, "தண்ணீர் இருக்கிறது என்று அடுத்தவீட்டுக் குப்பனுக்கு யாரோ சொன்னனமே" என்றான்.

ஒரு ஜமீன்தார் வயிற்று வலியினல் அபரிமிதமாய்ப் பாதைப்பட்டுக் கொண்டிருக்கையில், இரண்டு பெரிய டாக்டர்கள் வைத்தியம் செய்து கொண்டிருந்தும், கொஞ்சமாவது அநுகூலமாகாமல் படுக்கையில் படுத்த அன்று தொட்டுத் துர்பலமாய்க் கொண்டே வந்தார். அவ்வாறிருக்க அந்த டாக்டர்கள் வியாதியினது காரணத்தைக் குறித்து அபிப்பிராய பேதம் கொண்டு, வயிற்றுக்குள் ரண மிருக்கிறதென்று ஒருவரும்; இல்லையென்று மற்றொருவரும்; சொல்லிச் சண்டைபோடத் தொடங்கினர்கள்.—"ஆகட்டும்! அவர் இறந்த பிறகு அறுத்துப் பார்த்தபோதாவது உண்மை வெளிப்படாதா?" என்று அவர்களில் ஒருவர் கடைசியில் சமாதானமாய்ச் சொன்னர். அதைக் கேட்டபிறகு ரோகிக்குண்டான தைரியத்தைச் சொல்லவே வேண்டியதில்லை.

அமெரிக்கா தேசத்தில் அற்புதமான ஒரு தூரதிருஷ்டிக்கண்ணடியைத் தயார் செய்தார்களாம். அதனல் பார்த்தால், ஆறுகாதம் தூரத்தில் வந்துகொண்டிருக்கும் போர்க் கப்பல் அறுபது கஜம் தூரத்தில் இருந்தாற் போலக் காணப்படுமாம்"—என்று இராமனதய்யர் தான் ஏதோவொரு பத்திரிகையில் படித்த வர்த்தமானத்தைச் சொன்னர். "ஆம்! ஆம்! அதுமட்டுமில்லை, அந்தயந்திரத்துடன் 'போனகிறுப்' என்னும் யந்திரத்தையும் சேர்த்துப் பார்த்தால், கப்பலில் இருப்பவர்கள் செப்பிக்கொள்ளும் வார்த்தைகள்கூடக் கேட்குமாம்" என்று சொல்லிச் சர்வக்ஞ சாஸ்திரியார் தன் ஞானதிக்யத்தைக் காட்டிக்கொண்டார்.

சிதம்பரம் செட்டி சத்திரத்தில் இரண்டு சிநேகிதர்கள் போஜனம் செய்துகொண்டிருக்கையில், அவர்களில் ஒருவன் தனது இலையில் பரிமாரியிருக்கும் பச்சைமிளகாய்ப் பச்சடியை நாவில் வைத்துக்கொள்ள அது இவ்வளவென்று சொல்ல முடியாத காரமாய் இருந்தபடியால் பொறுக்கமுடியாமல் கண்ணீர் சொறிய ஆரம்பித்தான். அதைக்கண்ட அவன் சிநேகிதன் "சாஸ்திரீ! என் அப்படி அழுகிருய்?" என்று கேட்க, "ஒன்றுமில்லை ஐயா! போன வருஷத்தில் பீபிள்ஸ்பார்க்குத் தீயில் மாண்டுபோன என் மனைவி சேஷம்மாளை நினைத்துக்கொள்ள அழுகை வந்தது" என்று அவன் பதில் சொன்னன். கொஞ்சநேரத்திற்குப் பிறகு குப்பண்ணகூட அப்பச்சடியை ருசிபார்த்துப் பொறுக்க முடியாமல் கண்ணீர் சொரிய ஆரம்பித்தான். அப்பொழுது சாஸ்திரி "நீ என் அழுகிருய்" என்று கேட்க,—"என்னத்திற்கா? உன் மனைவி மாண்டுபோன பொழுது, நீ கூடப் போகவில்லையே என்று அழுதேன்" என்று குப்பண்ண செப்பினன்.

நேட்டால் டர்பானிலிருக்கும் மிஸ்டர், P. S. சிதம்பரம்பிள்ளை அவர்களை நமது பத்திரிகைக்கு சந்தாதார்களைச்சேர்க்கவும் சந்தாத்துகைகளை வசூலிக்கவும் ஏஜண்டாக ஏற்படுத்தியிருக்கிறோம்.

ஜோகன்ஸ்பார்க், கிம்பர்லி, கினிகாட், ரொடேஷியா, பினங்கு, சிலாங்கூர், கோலாலம்பூர் முதலிய வெளிநாட்டிலிருக்கும் நமது சந்தாநேயர்கள் 1912-ம் வருஷத்திய சந்தாத்துகையை விரைவில் அனுப்பிவித்து பத்திரிகையை ஆதரிக்கவேணுமாய் வேண்டிக்கொள்ளுகிறோம்.

(பத்திராதிபர்.)

## நூதன விடுகதை வினா.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

(1) மண்டலத்திலோர் பொருட்பேராறெழுத்தில்
வயங்குபின் மூன்றெழுத்த கற்றமகிழ்ச்சி யென்பார்
ரண்டுடன்பின் மூன்றெழுத்து மகற்றவெண்மை
ரஞ்சிதநான் கொடுமூன்றால் மதன் பெண்ரோங்
கண்டவொரு வைந்துநான் குடன் மூன்றுஞ்சொல்
கடையிரண்டாற் சிற்பமொன்று வைந்தொன்றாலே
சண்டனெனச்சொல்லு வரிப்பொருள் தெரிந்து
தாரணியில் விடைபகர்வீர் தமிழ் வல்லோரே.

(2) சிஷ்டர்கட்கு செய்கடமை யொன்றினுமஞ்
சிறந்த பஞ்சாக்ஷரத்தில் ரண்டுமூன்றைப்போக்க
கஷ்டமிலா வூக்கமென்பரிரண்டு நான்கு
கனவைந்தாற் கடவுளென்பர் பின்மூன்றாலே
நஷ்டமில்லாச் சத்தென்பரொன்று மூன்றால்
நாட்டினிலாலோசனை யென்றோதுவார்கள்
அஷ்டதிசையும் புகழுங் கவிவல்லோரே
அன்புடனே யிதற்குவிடை சொல்லுவீரே-

V. மௌனகுருருத்திரமூர்த்தி ஆச்சாரியார்,
லேட்முனிசிபல் கௌன்சிலர், பழனிஸ்தலம்.

---

## "கிருஷிகன்"

விவசாயத்தில் அனுபோகமும் பாண்டித்யமு முள்ளவர்களால் எழுதப்படும் ஓர் மாதாந்தரப் பத்திரிகை. எல்லாரும் எளிதில் வாங்கி வாசிக்கவேண்டுமென்னும் முக்கியமான எண்ணத்துடன் வருஷ சாந்தா தபால்கூலி உள்பட அணா 12, என்று குறைச்சலாய் வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா அங்கீகரிக்கப்படமாட்டாது. பிரதிவருஷமும் சித்திரை மாதம் முதல் ஆரம்பிக்கிறது. வருஷமத்தியில் சேர்ந்தால்கூட சித்திரைமாதம முதல்தான் கணக்கு வைக்கப்படும் சென்ற சஞ்சிகைகள் கூடியவரையில் சப்ளை செய்யப்படும் வேண்டியவர்கள் ரங்கராஜு பிரதர்ஸ் 5, மௌண்ட் ரோட் சென்னை என்று எழுதி, வி.பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்

இதைவிட வேறுஅத்தாக்ஷி என்ன;

"இராஜாம்பாள்" புஸ்தகம் பிரசுரமான மூன்று வருஷங்களுக்குள் மூன்று பதிப்புகள் அச்சடித்து பூராவாய் செலவாகி இப்போது நான்காம் பதிப்பு அச்சிலிருக்கிறது,

"இராஜாம்பாள்" "சந்திரகாந்தா" "மோஹனசுந்தரம்" என்னும் மூன்றுநாவல்களும் ஒன்றைவிட ஒன்று நான்முன் நான்முன் எனகைதட்டி ஆர்ப்பரித்து சந்தோஷிக்கச் செய்யக் கூடிய சக்திவாய்ந்தவை. எல்லாரும் எளிதில் வாசிக்குமாறு இனிய எளிதானநடையில் எழுதப்பட்டிருக்கின்றன. மேலும் மேற்கண்ட ஒவ்வொரு நாவலிலும் கண்டோர் மனதைக்கவரும் மூன்றுசித்திரப்படங்கள் வழவழப்பான கடிதத்தில் அச்சடித்து சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்நாவல்களைப்போல் வேறுநாவல்கள் இதுவரையில் பிரசுரிக்கப்படவில்லையென்று பத்திராசிரியர்களாலும் வாசித்த எல்லாராலும் புகழப்பட்டது. இவைகளைப் புகழ்ந்து ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் கிடைத்திருக்கிறது. இவ்வளவு அபூர்வமாகிய நாவல்கள் ஒவ்வொன்றின் விலை அணா 12, தபால்கூலி, வி. பி. கமிஷன் பிரத்தியேகம் வேண்டியவர்கள் ரங்கராஜு பிரதர்ஸ் 5-மௌண்ட்ரோட் சென்னை என்று எழுதி வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

---

## ரோமசங்காரி சோப்.

தேகத்தின் எந்தப்பாகத்திலும் இந்த ஸோப்பை உபயோகித்தால் யாதொரு கெடுதியுமின்றி ரோமங்களைச் சங்காரஞ் செய்துவிடும். 6-மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய கட்டி 1-க்கு விலை 6-அணா டெஜன் ரூ 4. வி. பி. சார்ஜ் 1-முதல் 3-க்கு 4-அணா.

## ரோமப்பிசின்.

இப்பிசின் நரைத்த மயிரை 2-நிமிஷத்திற்குள் பழயபடி கறுப்பாக்கிவிடும். கெடுதி செய்யக்கூடியது ஒன்றும் இதில் கிடையாது 1-புட்டி 3-மாதத்துக்கு போதுமானது. டைரக்ஷன் மருந்துடன் அனுப்பப்படும். புட்டி 1-க்கு விலை 12-அணா; டெஜன் 1-க்கு ரூ 8. 1-முதல் 3-புட்டிக்கு வி.பி. சார்ஜ 4-அணா.

## கார்பாலிக் டூத்பவுடர்.

இந்தபற்பொடி; வாயிலுண்டாகும் துற்நாற்றத்தைபோக்கி பல்லைச்சேர்ந்த எல்லா வியாதிகளைப்போக்கி பற்களை கெட்டிப்படுத்தும். டின் 1-க்கு $1\frac{1}{2}$-அணா, டெஜன் 14-அணா 1-டெஜனுக்கு வி. பி. சார்ஜ் 4-அணா,

Apyly to Messrs—J. SUR & Co,
Patent Medecine Sellers & General order Suppliers,
South Sinthee Road, P. O. (B) Gossipore, Calcutta.
**Agent. Lakshmivilasa Provident Intitution Ld. Kumbakonam.**